**த. நா.ச.பே. எண் : 025** **நாள் : 07.06.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (7.6.2018) சட்டப்பேரவையில், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் வட்டம், பெருமாள் வடக்கு வீதியில் உள்ள வீட்டில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த இரண்டு நபர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து உரையாற்றினார்.**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், பெருமாள் வடக்கு வீதியில் உள்ள வீட்டில் **8.5.2018** அன்று திரு. கணேசன் என்பவர் தொலைக்காட்சி பெட்டிக்கு கேபிள் இணைப்பை கொடுக்க முற்பட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இது சம்பந்தமாக காவல் துறையினர் விசாரணைக்கு வந்தபோது, அவருடைய சகோதரர் திரு. ராஜு என்பவர், தனது அண்ணன் எவ்வாறு இறந்தார் என்பதை காவலர் முன் செய்து காண்பிப்பதற்காக மீண்டும் தொலைக்காட்சி பெட்டிக்கு இணைப்பை கொடுக்க முற்பட்டபோது, அவரும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இவ்விருவரும் உயிரிழந்த செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த சகோதரர்கள் திரு. கணேசன் மற்றும் திரு.ராஜு அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, திரு.கணேசன் மற்றும் திரு. ராஜு ஆகியோரின் குடும்பத்திற்கு தலா **3** லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இம்மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**